## ஒருங்கிணைக்கப்பட்ட கட்டணம் இடைமுகம் மற்றும் BHIM



**செய்யவேண்டியவை:**

- எப்போதும் UPI பரிவர்த்தனைகளின் ஆவணங்களை வைத்திருங்கள்
- மோசடிகள் பற்றி பணியாளர்களுக்கு முழுமையாக கல்வி அளிக்கப்படுவதை உறுதி செய்யுங்கள்
- மோசடிச் செயல்களுக்கு வழிவகுக்கக்கூடிய செயல்கள், எ.கா. பின் எண், கணக்கு எண் மற்றும் தனிப்பட்ட தகவலைப் பகிர்ந்து கொள்வதைத் தவிர்க்கும்படி அவர்களிடம் சொல்லப்பட வேண்டும்.



**செய்யக்கூடாதவை:**

- பயோமெட்ரிக் மற்றும் M-பின் விவரங்களை எந்த வடிவிலும் - எழுத்து வடிவிலோ அல்லது மின்னணு வடிவிலோ சேமித்து வைக்கக்கூடாது.
- வாடிக்கையாளரின் தகவலின் பாதுகாப்பினை ஒருபோதும் புறக்கணிக்காதீர்கள்
- வாடிக்கையாளர் விவரங்களை சரிபார்க்காமல் சேகரிப்பதற்கான கோரிக்கையை வழங்குவதைத் தவிர்த்திடுங்கள்

## விழிப்புணர்வு இயக்கம் பங்காளர்கள்

Follow us

dsci_connect dsci.connect

dsci-security-council-of-India

Digital India
Power To Empower

Ministry of Electronics and Information Technology
Government of India

# DIGITAL PAYMENT Suraksha

A Joint Initiative of

DSCI | Google



*"Digital money will empower the poor"*

- Narendra Modi
Prime Minister

## டிஜிட்டல் கட்டணங்கள்

#SaralBhiSecureBhi

உங்களது வாடிக்கையாளர்களிடம் இருந்து டிஜிட்டல் முறையில் கட்டணங்களை நீங்கள் பெறும்போது நீங்கள் மனதில் கொள்ள வேண்டிய செய்ய வேண்டியவை மற்றும் செய்யக் கூடாதவற்றை உங்களுக்கு இந்த புத்தகம் அறிமுகப்படுத்தும்.

இதை ஸ்கேன் செய்யவும்

www.dsci.in/digital-payment-suraksha

## ஆதார் செயல்படுத்தப்பட்ட கட்டண முறை



**செய்யவேண்டியவை:**

- சாதனங்கள் (POS மற்றும் பயோமெட்ரிக் விவரத்தைப் பெறும் இயந்திரம்) சிதைக்கப்படாமல் இருப்பதையும் மேலும் சான்றளிக்கப்பட்ட சாதனங்கள் மட்டுமே. பயன்படுத்தப்படுவதையும் உறுதி செய்யவும்.
- எப்போதும் உங்களது POSஐ புதுப்பித்து வைத்திடுங்கள் மேலும் அதன் பாதுகாப்பினை உறுதிசெய்திடுங்கள்
- POSஇன் சந்தேகப்படும்படியான நடத்தைகளைப் பற்றி முறையாக புகாரளிப்பதை உறுதி செய்யுங்கள்



**செய்யக்கூடாதவை:**

- POSஐ திறந்தவெளி அல்லது பாதுகாப்பற்ற இடங்களில் வைப்பதைத் தவிர்த்திடுங்கள்
- முழு அட்டை அல்லது ஆதார் விவரங்களை காகிதத் துண்டுகள் மற்றும் அறிக்கைகளில் அச்சிடாதீர்கள்
- ஆதார் விவரங்கள் - எண், தனிப்பட்ட தகவல், பயோமெட்ரிக்ஸ் ஆகியவை சேமித்து வைக்கப்பட கூடாது

## அடிப்படை அத்தியாவசியங்கள்

**செய்யவேண்டியவை:**

- எப்போதும் கட்டணங்களைக் கையாளும் உங்களது பணியாளர்களிடம் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களைப் பற்றி கல்வியளித்திடுங்கள்
- நன்றாக பரிசோதிக்கப்பட்ட பாதுகாப்பான மற்றும் நம்பிக்கையான கட்டண வழித்தடங்களை மட்டுமே எப்போதும் பயன்படுத்துங்கள்
- வங்கியின் இணையதளங்களில் உள்ள இணைப்புகளில் அவற்றை உறுதிப்படுத்துவதன் மூலமாக பயன்பாடுகளின் நம்பகத்தன்மையை உறுதி செய்யுங்கள்
- பயன்படுத்தப்படும் சாதனங்கள் (POS மற்றும் பயோமெட்ரிக் விவரத்தைப் பெறும் இயந்திரம்) புதுப்பிக்கப்பட்டிருப்பதையும், எந்தவகையிலும் சிதைக்கப்படாமல் இருப்பதையும் மேலும் சான்றளிக்கப்பட்ட சாதனங்கள் மட்டுமே பயன்படுத்தப்படுவதையும் உறுதி செய்யவும்.
- பரிவர்த்தனைப் பதிவுகள் மற்றும் எச்சரிக்கைகளில் கவனம் செலுத்துங்கள்; மேலும் சந்தேகத்திற்கு இடமான அல்லது மோசடி முயற்சிகளைப் பற்றி சம்மந்தப்பட்ட சேவை வழங்குவோர் மற்றும் காவல்துறை அதிகாரிகளுக்கு புகாரளிக்கவும்.

**செய்யக்கூடாதவை:**

- நம்பகமற்ற மற்றும் சரிபார்க்கப்படாத வளங்கள் / ஆப் ஸ்டோர்களில் இருந்து ஒருபோதும் பயன்பாடுகளை நிறுவாதீர்கள்.
- பாதுகாப்பற்ற/திறந்த Wi-Fi முனையங்களை ஒருபோதும் டிஜிட்டர் கட்டணங்களை பெறுவதற்கு பயன்படுத்தாதீர்கள்
- ஒருபோதும் கட்டண சாதனங்களை கவனிக்காமல் விட்டுவிடாதீர்கள் அல்லது தெரியாதவர்களிடம் கொடுக்காதீர்கள்.
- பயோமெட்ரிக், M-பின், கடவுச்சொல் போன்ற எந்த வாடிக்கையாளரின் முக்கியமான விவரங்களையும் எந்த வடிவிலும் (எழுத்து.'.மின்னணு வடிவில்) சேமித்து வைக்காதீர்கள்.

## ஆன்லைன் மற்றும் மொபைல் பேங்கிங்

**செய்யவேண்டியவை:**

- எப்போதும் பாதுகாப்பான மற்றும் நம்பகமான கட்டண வழித்தடங்களைப் பயன்படுத்துங்கள்
- கட்டண வழித்தடங்களின் ஒருங்கிணைப்பு நன்றாக பரிசோதனை செய்யப்பட்டிருப்பதை உறுதி செய்யுங்கள்
- ஆன்லைன் மற்றும் மொபைல் வங்கிப் பயன்பாட்டு முறையைப் பயன்படுத்தி வாடிக்கையாளர்களால் பரிவர்த்தனை செய்ய முடிகிறதா என்பதை சரிபாருங்கள்.

**செய்யக்கூடாதவை:**

- வாடிக்கையாளர்களிடம் அவர்களது ஆன்லைன் வங்கி விவரங்களை கேட்பதைத் தவிர்த்திடுங்கள்
- கட்டண தொகுதியின் பாதுகாப்பினை ஒருபோதும் அலட்சியப்படுத்தாதீர்கள்
- மோசடி முயற்சிகளை ஒருவோதும் புறக்கணிக்காதீர்கள், முறையாக அவற்றை வங்கி/கட்டண வழித்தட அமைப்பினரிடம் புகார் அளித்திடுங்கள்

## மொபைல் வாலெட்

**செய்யவேண்டியவை:**

- எப்போதும் வாலெட்டுகளில் இருந்து பெறப்பட்ட கட்டணத்தை நேர் செய்திடுங்கள் மேலும் பரிவர்த்தனை குறிப்பு எண்களை சரிபார்த்துக் கொள்ளுங்கள்.
- பாதுகாப்பான மற்றும் நிலையான QR குறியீட்டைப் பயன்படுத்தி வாடிக்கையாளர்களால் பரிவர்த்தனை செய்ய முடிவதை அவ்வப்போது சரிபாருங்கள்.
- முக்கியமான தகவலை பகிர்ந்து கொள்ளும் முன்பு முகவரின் பணி அடையாள எண்ணை எப்போதும் சரிபார்த்திடுங்கள.

**செய்யக்கூடாதவை:**

- எந்த வடிவிலும் (எழுத்து/மின்னணு வடிவில்) வாடிக்கையாளர்களின் முக்கியமான தகவலை சேமித்து வைப்பதைத் தவிர்த்திடுங்கள்.
- மோசடி முயற்சிகளை ஒருபோதும் புறக்கணிக்காதீர்கள் மேலும் சம்மந்தப்பட்ட வாலெட் நிறுவனத்திடம் புகார் அளித்திடுங்கள்.
- தேவையை விட அதிகமான வாடிக்கையாளர் விவரங்களை சேகரிப்பதை தவிர்த்திடுங்கள்.

## கடன் மற்றும் பற்று அட்டை

**செய்யவேண்டியவை:**

- அட்டைப் பரிவர்த்தனைகளை வாடிக்கையாளரின் மேற்பார்வைல் மட்டுமே செயல்படுத்திடுங்கள்.
- எப்போதும் உங்களது POSஐ புதுப்பித்து வைத்திடுங்கள் மேலும் அதன் பாதுகாப்பினை உறுதிசெய்திடுங்கள்
- POS சாதனங்கள் எந்தவகையிலும் சிதைக்கப்படாமல் இருப்பதையும் மேலும் சான்றளிக்கப்பட்ட சாதனங்கள் மட்டுமே பயன்படுத்தப்படுவதையும் உறுதி செய்யவும்.

**செய்யக்கூடாதவை:**

- POS சாதனங்கள் உங்களது பார்வையை / மேற்பார்வையை விட்டு விலகிச் செல்வதை தவிர்த்திடுங்கள் மேலும் அங்கீகரிக்கப்படாத மக்களால் அது பயன்படுத்தப்படக் கூடாது.
- அட்டையின் CVV மற்றும் PINஐ சேமித்து வைக்காதீர்கள்
- மிகவும் அவசியம் ஏற்பட்டாலே தவிர வாடிக்கையாளர்களின் அட்டை விவரங்களை சேமித்து வைப்பதைத் தவிர்த்திடுங்கள்.